KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 29.07.2010

<table>
<tr><th>Date of the Council Meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>29.07.2010</td><td>762</td><td>பொருள் எண்: 1<br>காயல்பட்டிணம் மூன்றாம்நிலை நகராட்சியில் மே - 2010 மற்றும் ஜுன் - 2010ம் மாதத்தில் கீழ்க்கண்டுள்ள பிறப்பு, இறப்புகளை பதிவு செய்து மன்றம் அங்கீகாரத்திற்கு.
<table>
<tr><th colspan="4">மே - 2010</th><th colspan="4">ஜுன் - 2010</th></tr>
<tr><th colspan="2">பிறப்பு</th><th colspan="2">இறப்பு</th><th colspan="2">பிறப்பு</th><th colspan="2">இறப்பு</th></tr>
<tr><td>ஆண்</td><td>21</td><td>ஆண்</td><td>10</td><td>ஆண்</td><td>27</td><td>ஆண்</td><td>10</td></tr>
<tr><td>பெண்</td><td>23</td><td>பெண்</td><td>5</td><td>பெண்</td><td>26</td><td>பெண்</td><td>6</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>44</td><td>மொத்தம்</td><td>15</td><td>மொத்தம்</td><td>53</td><td>மொத்தம்</td><td>16</td></tr>
</table>
செயல் அலுவலர் குறிப்பு:<br>பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ததை பார்வையிட்டு மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>763</td><td>பொருள் எண்: 2<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியில் லைசென்ஸ் சர்வேயராக பதிவு செய்யக்கோரி திரு. கே.நாரயணன், 34, காமராஜர் சாலை, திருச்செந்தூர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும்.<br>செயல் அலுவலர் குறிப்பு:<br>பார்வையிட்டு மன்றம் முடிவு செய்யலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>764</td><td>பொருள் எண்:- 3<br>உள்கட்டமைப்பு மற்றம் அடிப்படை வசதிகள் கட்டணம் நகர் ஊரமைப்பு துறை திருநெல்வேலி மண்டலம் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் திருத்திய கட்டணம் மற்றும் செலுத்துதல் தொடர்பான அரசானையின்படி மனுதாரரிடமிருந்து வசூலிக்க உள்ளாட்சிகளுக்கு அறிவுறுத்தி மேல் நடவடிக்கை எடுக்க அரசானை எண் 161, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD 4(1)) நாள்:- 09.09.2009 மன்றத்தின் பார்வைக்கு.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செயல் அலுவலர் குறிப்பு:
<table>
<tr><th>S.No</th><th>Type Of Building</th><th>Other Areas (Rate Per Sq.Mtr)</th></tr>
<tr><td>1.</td><td>Multi Storeyed Building</td><td>250.00</td></tr>
<tr><td>2.</td><td>Multi Storeyed Residential</td><td>250.00</td></tr>
<tr><td>3.</td><td>Other than multi storeyed Building</td><td>125.00</td></tr>
<tr><td>4.</td><td>Institutional Building</td><td>50.00</td></tr>
<tr><td>5.</td><td>Industrial Building</td><td>75.00</td></tr>
</table>
அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட மேற்காண் தொகையை மன்றம் அங்கீகரிக்க.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>765</td>
<td>பொருள் எண்:-4<br>(a)நகராட்சி பகுதியில் உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ அருகில், புதிய பேருந்து நிலையம், தாயிம் பள்ளி சந்திப்பு, அல்-ஜாமியுல் அஸ்ஹர், கடற்கரை ஆகிய இடங்களில் உள்ள 5 உயர் கோபுர விளக்குகளை பழுது நீக்கம் செய்தது.<br>(b)பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சிக்கு கடைகள் மற்றும் நகராட்சி கணிப்பொறி அறை ஆகியவற்றில் வயரிங் வேலை செய்தது.<br>(c) நகராட்சிக்கு வாங்கப்பட்ட புதிய வாகனத்தினை பதிவு செய்தது.<br>(d) பொது சுகாதார டிப்பர் ஆட்டோ மற்றும் டிப்பர் லாரி பழுது நீக்கம் செய்து வண்ணம் பூசி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது (FC).<br>மேற்கண்ட செலவினங்களை மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்க.<br>செயல் அலுவலர் குறிப்பு:<br>மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்கொண்ட செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 766 | **பொருள் எண்: 5**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010-11-ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட 4 பணிகளுக்கு நான்கவது 30.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு பணிக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு பணிக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண் \| பணியின் பெயர் \| மதிப்பீடு (இலட்சத்தில்) \| ஒப்பந்தகாரார் பெயர் மற்றும் முகவரி \| ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)<br>1. \| ஒடக்கரையில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் கட்டுதல் \| 2.75 \| திரு.S.குமரேசன், திருச்செந்தூர். \| 4.78% கூடுதல்<br>\| \| \| திருமதி.F.முனவ்வரா, காயல்பட்டணம். \| 5.26% கூடுதல்<br><br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் திரு.S.குமரேசன், திருச்செந்தூர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.78% கூடுதலாக கோரியுள்ளார். அவரது ஒப்பந்தப்புள்ளி அடுத்த ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாக இருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளிளை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவ அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்க.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 767 | **பொருள் எண்: 6**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியில் பாராளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2010-11-ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு 30.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண் \| பணியின் பெயர் \| மதிப்பீடு (இலட்சத்தில்) \| ஒப்பந்தகாரார் பெயர் மற்றும் முகவரி \| ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)<br>1. \| தூத்துக்குடி திருச்செந்தூர் கன்னியாக்குமரி [illegible] \| 4.25 \| திரு.A.முருகன், தூத்துக்குடி. \| 2.50% கூடுதல் | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | நெடுஞ்சாலையிலிருந்து துளிர் பள்ளி வரை செல்லும் தென்வடல் சாலை தார் சாலை அமைத்தல். | | M/s ஜெயசூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தூத்துக்குடி | 0.12% குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் M/s ஜெயசூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தூத்துக்குடி என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.12% குறைவாக கோரியிருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்க மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் அங்கீகரிக்க.

**செயல் அலுவலர் குறிப்பு:**

மேற்கண்ட பணியின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

768 **பொருள் எண்: 7** — அங்கீகரிக்கப்பட்டது

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010-11-ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட 4 பணிகளில் ஒப்பந்தப்புள்ளி வரப்பெறாத மூன்று பணிகளுக்கு 20.07.2010 அன்று ஐந்தாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தகாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | கடையக்குடியில் (கொம்புத்துறை) மீனவர் வலைக் கூடம் கட்டுதல். | 1.00 | திரு.S.குமரேசன், திருச்செந்தூர். | 4.94% கூடுதல் |
| | | | திருமதி.F.முனவ்வரா, காயல்பட்டணம். | 7.24% கூடுதல் |
| 2. | கற்புடையார் பள்ளி வட்டத்தில் (சிங்கித்துறை) மீனவர் வலைக் கூடம் கட்டுதல். | 1.00 | திரு.S.குமரேசன், திருச்செந்தூர். | 23.57% கூடுதல் |
| | | | திருமதி.F.முனவ்வரா, காயல்பட்டணம். | 0.11% குறைவு |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>3.</td><td>கீழலெட்சுதிபுரத்தில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் கட்டுதல்.</td><td>2.75</td><td>திரு.A.அலைக்ஸான்டர், பிச்சிவிளை</td><td>4.96% கூடுதல்</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>திரு.S.குமரேசன், திருச்செந்தூர்.</td><td>10.45% கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அதில் குறைந்த விலை கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்கண்ட பணிகள் அரசின் திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளின் குறைந்த ஒப்பந்தப்புளிகளை நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று அங்கீகரித்ததையும் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்க.<br>
செயல் அலுவலர் குறிப்பு:<br>
மேற்கண்ட பணிகள் அரசின் திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றதையும் வேலை உத்திரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>769</td>
<td>
பொருள் எண்: 8<br>
காயல்பட்டணம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தினசரி 23 லட்சம் லிட்டர் குடிநீர் இரண்டு 40 HP மின் மோட்டார் மூலம் ஆத்தூரிலிருந்து பம்பிங் செய்யப்பட்டு நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது குடிநீர் பம்பிங் செய்யப்படும் இரண்டு மின்மோட்டர்களில் ஒரு மின் மோட்டார் குடிநீர் உந்து சக்தி மிகவும் குறைவாக உள்ளது. ஆதலால் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் குடிநீர் ஏற்றி விநியோம் செய்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது ஆகையால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உந்து சக்தி குறைவாக உள்ள ஒரு 40 HP மின்மோட்டாரை மாற்றி விட்டு புதிய 40 HP மின் மோட்டாரை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து மாற்றியமைக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்ட நகர்மனற் துணைத் தலைவர் திரு.M.A.கசாலி மரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>
செயல் அலுவலர் குறிப்பு:<br>
குடிநீர் பணி அவசியம் ஆதலால் அவசர அவசியம் கருதி மோட்டாரை மாற்றியமைக்க மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>